*கவனிக்க.-2024.09.06 ஆந் திகதிய இல.2401 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II ( தமிழ் மொழி மூலம்), மற்றும் பகுதி IV (ஆ) (தமிழ்மொழிமூலம் ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


**අංක 2402 - 2024 සැප්තැම්බර් මස 13 වැනි සිකුරාදා - 2024.09.13**

*2402 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | 168 |
| நானாவித அறிவித்தல்கள் | 169 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


167 - B 082608- 353 (2024/09)

# நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல்

**அறிவித்தல்**

**107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்**

*கம்பஹா மேல் நீதிமன்ற வலயத்திற்குள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகள் மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திருமதி அதுபத்து பதிரன்னெஹெலாகே சோமாவதி விஜேசூரிய அவர்கள் 2024.02.29 ஆந் திகதி தொடக்கம் பதவி விலகியதை பொது நிர்வாக , உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அனுமதித்துள்ளார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.*

*பிரதீப் யசரத்ன,*
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
*மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி*
*அமைச்சு.*

கொழும்பு,
*2024, ஒகத்து 13.*

*09- 104*

---

**அறிவித்தல்**

**107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்**

*பாணந்துறை மேல் நீதிமன்ற வலயத்திற்குள் சிங்கள மொழி மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு. ஹுளுவிட்டகே தயாநந்த சந்திரசிறி பீரிஸ் அவர்கள் 2024.03.25 ஆந் திகதி தொடக்கம் பதவி விலகியதை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அனுமதித்துள்ளார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.*

*பிரதீப் யசரத்ன,*
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
*மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி*
*அமைச்சு.*

கொழும்பு,
*2024, ஒகத்து 13.*

*09- 105*

---

**அறிவித்தல்**

**107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்**

*சிலாபம் மேல் நீதிமன்ற வலயத்திற்குள் சிங்கள மொழி மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திருமதி ராஜபக்ஸ கோராலலாகே ரீட்டா லோரன்ஸ் நெதலி வினிபிரட் கல்தேரா அவர்கள் 2019.04.12 ஆந் திகதி தொடக்கம் பதவி விலகியதை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அனுமதித்துள்ளார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.*

*பிரதீப் யசரத்ன,*
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
*மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி*
*அமைச்சு.*

கொழும்பு,
*2024, ஒகத்து 13.*

*09- 106*

### அறிவித்தல்

### 107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்

*நீர்கொழும்பு மேல் நீதிமன்ற வலயத்திற்குள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகள் மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு. நெல்சன் பிரசன்ன குமாரநாயக்க அவர்கள் 2024.03.20 ஆந் திகதி தொடக்கம் பதவி விலகியதை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அனுமதித்துள்ளார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.*

*பிரதீப் யசரத்ன,*
*செயலாளர்,*
*பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,*
*மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி*
*அமைச்சு.*

கொழும்பு,
*2024, ஓகத்து 13.*

*09- 107*

---

### அறிவித்தல்

### 107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்

*கேகாலை மேல் நீதிமன்ற வலயத்திற்குள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகள் மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு. கருணாதிலக்க மெதகெதர சோமரத்ன அவர்கள் 2024.03.01 ஆந் திகதி தொடக்கம் பதவி விலகியதை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அனுமதித்துள்ளார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.*

*பிரதீப் யசரத்ன,*
*செயலாளர்,*
*பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,*
*மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி*
*அமைச்சு.*

கொழும்பு,
*2024, ஓகத்து 13.*

*09- 108*

---

## நானாவித அறிவித்தல்கள்

### படிவம் மூன்று( விதி -7) மனுவின் விளம்பரம்

### கொழும்பு மேல் நீதிமன்றத்தின் குடியியல் நியாதிக்கத்திற்கு உட்பட்டது

*இலக்கம் 65, லலானி கட்டிடம், நீர்கொழும்பு வீதி, ஜா-எல என்ற முகவரியில் அமையப்பெற்றுள்ள "டைல்ஸ் கலெக்சன் ( தனியார் ) " நிறுவனத்தினை முடிவுறுத்தல் தொடர்பான விண்ணப்பம்*

வழக்கு இல. : CHC 56/ 2024/CO
தன்மை : முடிவுறுத்தல்
நடபடிமுறை: வழமை

*திரு. யோகேந்திர மாலு ராஜ் அண்ட் கம்பெனி எனும் நாமத்திலும் வடிவத்திலும் இடம்பெறுகின்ற வர்த்தகத்தின் கூட்டுடமையாளர் இலக்கம் 15-16 கலக்சி வர்த்தக நிலையம் , முதலாம் மாடி, ஜவகர் வீதி, ராஜ்கோட், 360001, குஜராத் , இந்தியா.*

தனது பதிவு பெற்ற அற்றோணித் தத்துவகாரர் மூலம் தோன்றுகிறார்.

முஹம்மது மர்சூக் றிகாஸ், இலக்கம் 65/39, பீரிஸ் வீதி, கல்கிஸ்ஸை.

*மனுதாரர்*

*எதிர்*

டைல் கலெக்சன் ( தனியார்) நிறுவனம், இலக்கம் 65, லலானி கட்டிடம், நீர்கொழும்பு வீதி, ஜா-எல.

*முடிவுறுத்தப்பட முனையும் நிறுவனம்*

டைல்ஸ் கலெக்சன் ( தனியார்) நிறுவனம், இலக்கம் 65, லலானி வீதி, நீர்கொழும்பு எனும் முகவரியில் அமையப்பெற்றுள்ள இந் நிறுவனத்தினை முடிவுறுத்துவதற்கான மனு ஒன்று கொழும்பு மாகாண மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் மேற்குறித்த மனுவினை 2024.09.28 ஆந் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் எனவும் கூறியுள்ளார். ஆகவே மேற்படி நிறுவனத்தின் ஏதேனும் கடனாளி அல்லது பங்களிப்பாளர் மேற்குறிப்பிட்ட மனு தொடர்பாக கட்டளை ஒன்று வழங்கப்படுவதை ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ விரும்பினால் இம்மனு தொடர்பான விசாரணையின் போது தானாகவோ அல்லது தனது சட்டப் பிரதிநிதி ஊடாகவோ தோன்ற முடியும். அதே வேளை மனுவின் பிரதியானது விதித்துரைக்கப்பட்ட கட்டணங்கள் தொடர்பான விதிமுறைகளுக்கு உட்பட்ட வகையில் அனைத்து கடனாளி மற்றும் பங்காளர்களுக்கு வழங்கப்படும்.

நீத்திக்க பாட்னர்ஸ் ( சட்டத்தரணிகள்),
இல. 21, பெல்மன்ட் வீதி, கொழும்பு -12.

**குறிப்பு**: எவரேனும் ஒருவர் மேற்படி நிபந்தனைகளுக்கு அமைவாக மன்றில் தோன்ற விருப்பம் கொண்டிருந்தால் அத்தகைய விருப்பத்தினை நீத்திக்க பாட்னர்ஸ் ( சட்டத்தரணிகள்) எனும் நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவித்தல் வழங்க வேண்டும். அவ் அறிவித்தலானது அத்தகைய நபரின் பெயர், விலாசம் அல்லது சட்ட நிறுவனம் எனின் அதன் பெயர், விலாசம் என்பனவற்றினைக் குறிப்பிட்டு நேரடியாக அல்லது பிரதிநிதி மூலமாக சேர்ப்பிக்கப்பட வேண்டும் .தபால் மூலம் அனுப்புவதாயின் 2024.09.27 ஆந் திகதி மாலை 6.00 மணிக்கு முன்னர் சேர்ப்பிக்கப்படும் வகையில் அனுப்பப்படல் வேண்டும்.

09- 67

---

**பிரதிவாதிக்கான அழைப்புக்கட்டளை ( ஒட்டிச் சேர்ப்பதற்கு)**
**களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றம்**

1999 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தாபரிப்புச் சட்டத்தின் பிரிவு 02 இன் கீழான விண்ணப்பம்

சுந்தரம் மஞ்சுளா, இலக்கம் 102, 37 ஆம் கொலணி, பாலையடி வட்டை, வக்கியல்ல.
கிராம அலுவலர் பிரிவு- 99B, வெல்லாவெளி- பிரதேச செயலகப் பிரிவு,
வெல்லாவெளி - பொலிஸ் பிரிவு.

*விண்ணப்பதாரி*

வழக்கு இல. : 2462/MA/23
தன்மை : தாபரிப்பு

*எதிர்*

சுந்தரம்பிள்ளை திலகேசுபரன் ( மோகன்), ( தே.அ.அ.இல. 822782841V)
C/O சின்னத்தம்பி குணராணி ( அம்மா)
இல. 03, தபால் நிலையம் முன்பாக, தபால் நிலைய வீதி, வெல்லாவெளி.

கிராம அலுவலர் பிரிவு- 99B, வெல்லாவெளி- பிரதேச செயலகப் பிரிவு,
வெல்லாவெளி - பொலிஸ் பிரிவு.

பிரதிவாதி

மேற்படி பிரதிவாதிக்கு

உமது வாழ்க்கைத் துணையான சுந்தரம் மஞ்சுளா என்பவரையும் பிள்ளையான திலகேசுபவரன் கவிஷன் என்பவரையும் நீர் பராமரிக்கவில்லை எனும் சாத்துதலுக்கு குற்றச்சாட்டுக்கு மறுமொழி கூறுவதற்கு நீர் சமுகமளிக்குமாறு அவசியமாக இருப்பதால் நீர் நேரடியாகவோ அல்லது சட்டத்தரணி ஒருவர் மூலமாகவோ இந்த நீதிமன்றம் முன்பு 2024.11.13 ஆந் திகதியன்று தோன்றுமாறு இத்தால் தேவைப்படுகின்றீர்.

2024, யூலை மாதம் 31.

"மன்றின் கட்டளைப்படி"

பதிவாளர்,
நீதவான் நீதிமன்றம்,
களுவாஞ்சிக்குடி.

09- 93

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.